**கூட்டுறவு தேர்தல் மிகவும் அவசரம்**

ந.க.92/2013/CE-5 (2) நாள். 11.03.2013

ஐயா,

பொருள்: தேர்தல் - கூட்டுறவுச்சங்கங்களின் நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் – தேர்தல் நடத்துதல் பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இட ஒதுக்கீடு - அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கான தேர்தல்களில், பெண்களுக்கு 30% மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 18% இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், சங்க உறுப்பினர்களில் மேற்கண்ட ஒதுக்கப்பட்ட இடங்களுக்கான, பெண்கள் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இல்லாத நிலையில், அவ்வகையில் வேட்புமனு ஏதும் தாக்கல் செய்யப்படாத நிலையில், அவ்வாறான இடங்களுக்கு எவ்வாறு தேர்தல் நடத்துவது என்பது குறித்து மாவட்டத் தேர்தல் அலுவலர் பயிற்சியின்போதும், மாநிலத் தேர்தல் அலுவலர் கூட்டங்களின்போதும் சந்தேகங்கள் எழுப்பப்பட்டன.

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் 1988, விதி எண் 52 (9) (சி)-ன் கீழ், எந்த ஒரு தொகுதிக்கும் போட்டியிடும் வேட்பாளர் எவரும் இல்லையென்றால் தேர்தல் அலுவலர் உடனடியாக மாவட்ட தேர்தல் அலுவலர், மாநிலத் தேர்தல் அலுவலர் மற்றும் தேர்தல் ஆணையம் ஆகியோருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

எனவே, பெண்கள் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு சட்டப்படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்களுக்கு வேட்பாளர் இல்லாத நிலையில், அதனை நிரப்பப்படாத இனங்களாகக் (Not Filled) கொண்டு, விதி எண் 52(9) (சி)ல் கூறப்பட்டவாறு, அதன் விபரத்தை மாவட்ட தேர்தல் அலுவலர், மாநிலத் தேர்தல் அலுவலர் மற்றும் தேர்தல் ஆணையம் ஆகியோருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும் என அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

இதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி உடன் தெரிவித்திடக் கோரப்படுகிறது.

(ஒம்../-) ம.ரா. மோகன்
ஆணையர்

பெறுநர்: மாநிலத் தேர்தல் அலுவலர்கள்.